# கண்நல விழிப்புணர்வு கண்காட்சி

மதுரை, அக். 10: மதுரை அரவிந்த் கண் மருத்துவமனையில் 'கண்ணே நலமா–2012' கண்நல விழிப்புணர்வு கண்காட்சி நேற்று துவங்கியது.

கலெக்டர் அன்சுல் மிஸ்ரா கண்காட்சியை துவக்கி வைத்தார். கண் நோய்கள் குறித்த குறும் படம் திரையிடப்பட்டது. வினாடி வினா நிகழ்ச்சி, மாதிரி அறுவை சிகிச்சைக் கூடம் மற்றும் 20க்கும் அதிக அரங்குகள் மூலம் கண் குறித்த விழிப்புணர்வு தகவல்கள் தெரிவிக்கப்பட்டன. அரவிந்த் கண் மருத்துவமனை டாக்டர்கள் நம்பெருமாள், சீனிவாசன், கிம், உஷா, கிருஷ்ணதாஸ் மற்றும் நிர்வாக அலுவலர் அரவிந்த், பிஆர்ஓ ராமநாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். நேற்று ஒரேநாளில் 2 ஆயிரத்து 200க்கும் மேற்பட்ட மாணவர்கள், பொதுமக்கள் கண்காட்சியை கண்டுகளித்தனர். இந்த இலவச கண்காட்சி நாளையுடன் நிறைவடைகிறது.